27 மே 2018

# NewBec

NEW WAY OF BEING CHURCH

திருத்துவ ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# அவரை நேருக்கு நேர் பார்க்கும்

**“மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்”** (தொநூ.1:26). ‘நம்’ ‘உண்டாக்குவோம்’ என்ற இரு வார்த்தைகளும் பன்மையில் அமைந்துள்ளதை கவனித்தீர்களா! எல்லாம் வல்ல இறைவனை நாம் ஒருமையில் அழைப்பதில்லை. திருத்துவத்தின் மறைபொருளை புரிந்து கொள்வதற்கு இது



ஆதாரமாக இருக்கிறது. இன்றளவும் ஒருசில மறைப்போதகர்கள் இந்த மறைபொருளைப் புரிந்து கொள்வதற்கும் கற்பிப்பதற்கும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். வரலாற்றில் கடவுளின் வெளிப்பாடு இயேசு கிறிஸ்து என்ற நபர் வழியாக முழுமையாக தெரிந்தது. அவரே நம்மிடையே வந்தார். நமது வாழ்வைத் தொட்ட அவரது கைகளை நம்மால் உணர முடிந்தது. நலிவடைந்த ஆன்மாவை ஆறுதல் அளிக்கும் முகத்தைப் பாரக்க முடிந்தது. இதற்கெல்லாம் மேலாக, நம்மை மீட்கும் கருணைமிக்க உள்ளத்தை காண முடிந்தது. நமக்கான நேர் பாதை தெள்ளத்தெளிவாக தெரிவதை திடீரென நம்மால் பார்க்க முடிந்தது.

> எல்லாக் கிறிஸ்துவர்களின் விசுவாசம், திருத்துவத்தில் அடங்கியுள்ளது.
>
> - புனித ஆர்ஸ் சிசரியுஸ்

விசுவாசத்தில் அறிக்கையிடுவது போல, அவரை நேருக்கு நேர் பார்ப்பதே நமது தலையாய குறிகோள். புனித பவுல் (1கொரி.13:12) குறிப்பிடுவது போல், இறுதியில் தெய்வீகப் பாதையில் பரம்பொருளை நமது உள்ளத்திலும் ஆன்மாவிலும் பிரதிபலிப்போம். இந்த தெய்வீக மறைபொருள் அல்லது அற்புதம் நம் வாழ்வில் நிலைப்பெறுவதற்கு, இருள் சூழ்ந்த பாதையில் நடந்து செல்வதற்கு எல்லாம் ஆற்றலையும் அதிகாரத்தையும் வழங்கும் தூய ஆவியின் அருளால் நாம் ஆட்கொள்படுகிறோம்.

இதனால் நமது வாழ்வின் செயலை ஆராய்ந்து, தெளிவை நாடும் நாம், நம்மில் இருக்கும் கிறிஸ்துவில் அது பிரதிபலிக்கப்படுகிறதா? நமது வாழ்வின் மையமாக இருக்கும் கிறிஸ்துவிலிருந்து நாம் ஆற்றலையும் சக்தியையும் பெறுகிறோம். ஆனால் அவரிடமிருந்து எவ்வளவு தள்ளி நிற்கிறோம். எண்ணற்ற தடவை நாம் அவரை விட்டு விலகிச் சென்றிருக்கிறோம். அவரைப் போல் நடக்க, அன்பு செய்ய, செயல்பட நாம் மறுக்கும் போது அவரிலிருந்து நாம் விலகுகிறோம். அதே வேளை, நம் மீது பொழியப்பட்டிருக்கும் அருளையும் அற்புதத்தையும் கண்டு, இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறோமா? அவர் அளித்தக் கொடைகளுக்கு அவர் பாணியில் நன்றி கூறியிருக்கிறோமா? உன்னை நீ நேசிப்பது போல பிறரையும் நேசி.

திருத்துவத்துடன் சேர்ந்து செல்லும் பாதையே கடவுள் வகுத்தப் பாதை. அவர்கள் வழியாகவே நம்மை நாம் பார்க்க முடியும். அவர்களில் ஒருவராக உண்மையிலேயே நாம் மாறும் போது நம்மீது அவர் செலுத்திய அன்புக்கு நாம் பத்திரமானவர்களாகிறோம். எனவே நமக்கான பாதை தெளிவாக தெரிகிறது, கிறிஸ்துவின் ஒளியில் நடப்போம். முக்கியமாக, அதே பாதையில் மற்றவர்களையும் அழைத்துச் செல்வோம். ✝

### வாரம் ஒரு வசனம்

அவரை நேருக்கு நேர் பார்ப்பதே நமது தலையாய குறிகோள்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஜுன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: மே சனி 26 -05-2018 - ஞாயிறு 03-06-2018 வரை**
மூவொரு இறைவன் பெருவிழா
இ.ச: 4:32-34, 39-40 தி.பா 33:4-5,6,9,18-19,20-22 உரோ:8:14-17 மத்: 28:16-20
**"ஆண்டவர் தம் உரிமைச் சொத்தாக தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்." திபா 32**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 26 | காலை 10.00 மணி - செபமாலை, நவநாள் & திருப்பலி & நோயாளிகளுக்கான விசேச ஆசீர் (மினவுதல் தேவாலய மூத்த குடிமக்கள் பணிக்குழு)<br>**மாலை 6.00 மணி - செபமாலை, நவநாள் & மாலை திருப்பலி & மெழுகு திரி ஏந்தி அன்னை மரியாளின் மாபெரும் தேர்ப்பவனி** - (இளைஞர் குழு) | | |
| ஞாயிறு | 27 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) தமிழ்அப்போஸ்தலப்பணி<br>திருப்பலி (ஆ) (பு.பெர்னெடின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 28 | 6.45 கா | *செபமாலை / நவநாள் / திருப்பலி / ஒன்றுகூடல் ( பங்கு ஒற்றுமைப் பணிக்குழு)* | |
| செவ் | 29 | 6.45 கா | *செபமாலை / நவநாள் / திருப்பலி / ஒன்றுகூடல் ( சமயங்களுக்கிடையிலான உரையாடல் குழு)* | |
| புதன் | 30 | 7.00 மா | *செபமாலை / நவநாள் / திருப்பலி / ஒன்றுகூடல் (பங்கு உருவாக்கப் பணிக்குழு)* | |
| வியா | 31 | 7.00 மா | *செபமாலை / நவநாள் / திருவிழா திருப்பலி / ஒன்றுகூடல் (திருவழிபாட்டுக் குழு / குடியேற்றவாசிகள்)* | |
| வெள் | 01 | காலை திருப்பலி நடைபெறாது | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை* | |

**கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா**
இ.ச: 24:3-8 தி.பா 115:12-13, 15, 16, 17-18 எபிரே:9:11-15 மாற்கு: 14:12-16, 22-26
**"மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவர் பெயரைத் தொழுதிடுவேன்." திபா 115**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/ நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி (பு 3ஆம் பெனடின்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.ஜேம்ஸ்)<br>திருப்பலி (ஆ) (புனித கத்தெரின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 மே (வைகாசி) மாத செய்திகள்/நிகழ்வுகள்**
i) ஆலய காணிக்கை
அ) 19/20 மே 2018 ரிம: 8,608.90
ஆ)தித்தி: ரிம: 95.00
இ) இரண்டாவது காணிக்கை: ரிம: 6,484.75

*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**iii) ஆலயத்தினுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:**
திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது. திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்

***மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்***
***லூர்ட்ஸ் அல்போன்சோ அந்தோணி (இறப்பு: 20/05/2018)***
***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக***

- **பங்கு மக்களுக்கு ஓர் அழைப்பு:** நம் ஆலயத்தில், மாதா கெபியில் உங்களுக்கு ஏற்பட்ட அற்புத அடையாளங்களை தெரிவிக்க அழைக்கிறோம். பங்கு அலுவலகம் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.
- **இளைஞர்கள் விழா:** ஞாயிறு 27/05/2018 மாலை 5.00 மணிக்கு இளைஞர்கள் அனைவரையும் வரவேற்கிறோம். உங்களுடைய நண்பர்களையும் உடன் அழைத்து வரவும்.
- **பைபிள் பாடம் எஸ்.பி.எம்** தேர்வில் பங்கு கொள்ள இப்போதே தயாராகுங்கள். படிவம் 3 மாணவர்களை இந்தப் பாடத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.(வகுப்புகள் சனிக்கிழமை பகல் 2.30) தற்போது படிவம் 4 & 5 மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள். தொடர்புக்கு. ஹெல்டன் 012-237 0982
- **மெத்தோடிஸ்ட் பள்ளிக்காக நிதி திரட்டு - 03-06-2018** நம் மினவுதல் தேவாலய உணவு விடுதியில் காலை உணவு விற்பனை . தொடர்புக்கு:ஸ்டீபன் 016-6110681 / 016-2681531

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கும் மற்றும் திருவழிபாட்டுக் குழுவினருக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**மினவுதல் மாதா தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்**

**"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது" (லூக்கா1:45)**

**26/05 (சனி):** காலை 10.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி & நோயாளிகளுக்கான விசேச ஆசீர் **(மினவுதல் தேவாலய மூத்த குடிமக்கள் பணிக்குழு)**
**மாலை 7.00 மணி** மாலை திருப்பலி & மெழுகுத் திரி ஏந்தி அன்னை மரியாளின் மாபெரும் தேர்ப்பவனி - **(இளைஞர் பணிக்குழு)** உணவு உபசரிப்பு: சோன் 16

**27/05 (ஞாயிறு):** காலை 7.00 மணி (த) காலை 9.00 மணி (ஆ) காலை 11.00 மணி (சீனம்) பகல் 1.00 மணி(தேமொ)
**மாலை 5.00 மணி: இளைஞர் விழா - இளைஞர் கொண் டாட்டம்**

**28/05 (திங்கள்):** மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( பங்கு ஒற்றுமை பணிக்குழு)** உணவு உபசரிப்பு ( சோன் 14 & 15)

**29/05 (செவ்):** மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழு)** (உணவு உபசரிப்பு சோன் 11,12 &13)

**30/05 (புதன்):** மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( பங்கு உருவாக்கப் பணிக்குழு)** உணவு உபசரிப்பு ( சோன் 18, 19, 20 & 21)

**31/05 (வியாழன்):** மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( திருவழிபாட்டு & குடியேற்றவாசிகள் பணிக்குழு)**

பங்கு திருவிழா
மே 31 , வியாழன்
மாலை **7.00 மணி**

- **அன்னை மரியாளின் கண்காட்சி:** மே 23 - 31 வரை மினவுதல் தேவாலய பார்லரில் கண்காட்சி நடைபெறும். அன்னை மரியாளின் வழியாக கடவுளைக் கண்டுக் கொள்ள வந்து பாருங்கள்.
- **மினவுதல் தேவாலய வரலாற்று நடை:** 170 ஆம் ஆண்டு காலப் பயணத்தை ஒட்டி ஒரு கண்காட்சி - விவிலிய அறையில் நடைபெறும்.மே 26 2018(சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு தொடக்கவிழா
- **170 ஆம் ஆண்டு நிறைவுக்காக - "காபி மேசை " நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம் இந்தப் புத்தகத்திற்காக முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: ஜெரோம் 019-790 8071 மற்றும் பங்கு அலுவலகத்தை நாடவும்
- திருவிழா செலவுகளுக்காக உங்களுடைய நன்கொடைய எதிர்பார்க்கிறோம்.தொடர்புக்கு பங்கு குருவானவர் மற்றும் பங்கு அலுவலகத்தை நாடவும்
- நவநாட்கள் நடைபெறும் நாட்களில் விருந்து உபசரிப்பின் போது உங்கள் திறமைகளை வெளிப்படுத்த (பாடல்/ஆடல்) ஆர்வமிருந்தால் தொடர்புக்கு எட் ரியன் (010-897 0642)

**கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா (03-06-2018)**
பகல் 2.00 - 5.00 வரை திவ்விய நற்கருணைஆராதனை(அமைதியாக)
மாலை 5.00 மணி - திருப்புகழ் மாலை மற்றும் -ஆலயத்தைச் சுற்றி திவ்விய நற்கருணைப் பவனி வந்து ஒரு மணி நேரம் ஆண்டவரோடு செபத்தில் பங்கு கொள்ளுங்கள்